DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-39/2023

Prosecution witness – PW 3

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.தமிழ்நாதன் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present.)

03.03.2026 – 01.35 PM

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் கடலாடி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். எனது அப்பா, அ.சா.2 எனது சித்தப்பா, ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.

2. கடந்த 24.02.2023 ம் தேதி இரவு 08.00 மணியளவில் எனது அப்பா என்னிடம் எனது சித்தப்பாவிற்கும் எதிரிக்கும் ஏதோ பிரச்சனை ஏற்பட்டதாக சொன்னார்கள். நான் மறுநாள் காலை எனது அப்பாவும், சித்தப்பாவும் இருசக்கர வாகனத்தில் நல்ல மருது என்பவரது வீட்டின் அருகே சென்றுள்ளார்கள். அந்த சமயத்தில் நான் விவசாய வேலைக்காக சென்றுவிட்டேன். எனது அப்பாவிற்கு தலையில் ரத்தக்காயம் ஏற்பட்டதாக எனது சித்தப்பா எனக்கு போன் மூலம் தகவல் சொன்னதன் பேரில் நான் சம்பவ இடத்திற்கு சென்று எனது அப்பாவை அழைத்துக்கொண்டு கடலாடி அரசு மருத்துமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தேன். பின்னர் மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். எனது அப்பாவிடம் நடந்த சம்பவத்திற்கு போலீசார் வாக்குமூலம் வாங்கினார்கள். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: -</u>**

நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான்

சம்பவ இடத்திற்கு சென்ற போது எனது அப்பா சுயநினைவுடன் இருந்தார் என்றால் சரியல்ல. ரத்தக்காயத்துடன் இருந்தார். நான் அவரை தூக்கி கொண்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். சம்பவ இடத்தில் வேறு யாரும் இல்லை என்றால் சரியல்ல. சுமார் 20க்கும் மேற்பட்ட நபர்கள் இருந்தார்கள். என்னுடைய இருசக்கர வாகனத்தில் தான் எனது அப்பாவை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றால் சரியல்ல. எனது சித்தப்பா வாகனத்தில் அழைத்து சென்றோம்.  என்னை விசாரணை செய்தது காவலரா அல்லது சார்பு ஆய்வாளரா என்றால் என்னை விசாரணை செய்யவில்லை. எனது அப்பாவை தான் விசாரணை செய்தார்கள். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் ஏதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.03 16:45:43 +0530